REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 9உ புதன் (20—2—57) ★ ★ வெளியீடு: மாசி 10உ வியாழன் (21—2—57) [இதழ் 218

மலையாள மொழியில் திருக்குறள்!

வள்ளுவன் செய்த திருக்குறள் மலையாளத்தில், மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது என்ற தித்திப்பான செய்தி கிடைத்திருக்கிறது.

சாஸ்தாமங்கலம் இராமகிருஷ்ணபிள்ளை என்ற 70 வயதான மலையாள இலக்கிய அறிஞர்—கவிஞர், குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவர் ஏற்கனவே பல ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளை மலையாளத்தில் வடித்தவர்.

இருபத்தைந்து ஆண்டுக்காலமாகப் பாடுபட்டு, உலகின் ஒப்பற்ற இலக்கியங்களுள் ஒன்றான குறளை மலையாளத்தில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

இந்தியத் தேர்தலுக்கு அன்னியர் பண உதவி!

டாக்டர் லோகியா வெளியிடும் திடுக்கிடும் தகவல்

பி. சோ. கட்சிமீது இந்திராவின் குற்றச்சாட்டு

விசாரணை நடத்தாதது நேரு செய்த தவறு என்கிறார்

ஐதராபாத், பிப். 19—

'இந்திய அரசியலில் அந்நிய நாட்டுப் பணம் பெற்றுள்ள பங்கு குறித்து இன்னும் திட்டவட்டமான நிரூபணம் எதுவும் இல்லாவிடினும், இந்த விவகாரம் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்' என்று துவங்கி, இந்த விவகாரம் பற்றித் தன்னிடமுள்ள தகவல்களை 'நான் மறைத்து வைப்பது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்' என்று கூறி, தொடர்ந்து சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா வெளியிட்டுள்ள அறிக்கையின் சாரம் கீழே தரப்படுகிறது:—

"1951-ம் ஆண்டில், அமெரிக்க சோஷலிஸ்டுத் தலைவரும் தொழிற்சங்கத் தலைவருமான நார்மன் தாமஸ், நியூயார்க் நகரில் என்னைச் சந்தித்தபோது, இந்திய சோஷலிச இயக்கம்பற்றி ஒரு குறிப்புத் தந்தால், அமெரிக்கத் தொழிலாளர்களையும் தொழிற் சங்கங்களையும் இந்தியாவில் தேர்தலுக்குப் பணம் தரச்சொல்லுவதாகக் கூறினார்.

"நான் 'சோஷலிசம், உள்நாட்டு மக்களின் ஆற்றலையும் ஆதரவையும் கொண்டுதான் வளர வேண்டும்,' என்று கூறினேன். மேலும் நான், 'காந்தியார் வளர்த்த பாரம்பரியத்திற்கு விரோதமாகவும் நடந்துகொள்ள முடியாது,' என்றும் கூறினேன்.

"உடனே நார்மன் தாமஸ் கூறினார்—'உலகத் தொழிலாளர் அனைவரும் ஒன்றுதான்; அமெரிக்கத் தொழிலாளர்கள், இத்தாலிநாட்டு சோஷலிஸ்டுகளுக்கு தேர்தலுக்காகத் தாராளமான பண உதவி செய்திருக்கின்றனர்' என்று கூறினார். இது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

"உண்மையில் கம்யூனிசம் இந்த நம்பிக்கையை நீண்ட நெடுநாள் கொண்டிருந்தது.

"ஒருவர் மற்றவரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளாதிருப்பது, சர்வ தேசக் கடமையைப் புறக்கணிப்பதாகும்—என்று உலகில் உள்ள பல்வேறு நாட்டுக் கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர்.

"ஒழுக்கங்கள் பற்றியும் தேசீயம் பற்றியும் கம்யூனிஸ்டுகளது குறுகிய நோக்கமும், தொழிலாளரின் சர்வதேசீயம் என்ற கற்பனையில் அவர்களுக்குள்ள பிரத்தியேக பக்தியும் இந்தப் பழக்கத்திற்கு அவர்களை ஆளாக்கியுள்ளன. நார்மன் தாமஸ்கூட இதே போலத்தான் கருதினார்.

"எனக்கு ஆச்சரியமளித்தது எல்லாம் அவர் கூறிய மற்றொன்றுதான்.

"பிரபலமான இந்திய சோஷலிஸ்டுத் தலைவர்கள், தேர்தலுக்கு அமெரிக்கப் பண உதவி கிடைப்பதை வரவேற்பதாக பம்பாயில் அவரிடம் கூறியதாக தாமஸ் என்னிடம் கூறியதுதான், என்னைத் திடுக்கிடவைத்தது!

"உருப்படியான திட்டங்களுக்குப் பகிரங்கமான சர்வ தேச உதவி தருவதை நான் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், உள்நாட்டு அரசியல் காரியங்களுக்கு இரகசியமான பண உதவி வெளிநாடுகளிலிருந்து தரப்படுவதை நான் ஏற்பதற்கில்லை.

"திருமதி இந்திரா காந்தியின் குற்றச்சாட்டினை அமுக்கிவிட்டதின் மூலம், பண்டித நேரு, நாட்டிற்குப் பெரும் தீங்கிழைத்துவிட்டார்.

"இந்தியக் கம்யூனிஸ்டுகள் மாஸ்கோ விசுவாசிகளாக இருப்பதைப்போலவே, பி. சோ. கட்சி மேற்கு வல்லரசுகளின் விசுவாசியாக இருக்கிறது என்பதை அங்கேரி, எகிப்து விவகாரங்களின்போது இந்த இரு கட்சிகளும் நடந்துகொண்ட முறைகள் கூறும். இந்த இரண்டு வகையான வெளிவிவகாரக் கொள்கைகளின் மோதுதலினுல் இந்திய சர்க்கார், எகிப்திற்கும் அங்கேரிக்கும் முறையே உருவான, மானசீகமான வகையில் துரோகம் இழைத்தது என்ற உண்மையான தேசீய—சர்வ தேசீயக் கருத்து, முக்கியத்துவம் பெற்று முன்னணிக்கு வரமுடியாமற் போய்விட்டது.

"கலாச்சார சுதந்திரக் கமிட்டி அல்லது பொருளாதாரக் கல்விக் கவுன்சில் போன்ற பல நிறுவனங்கள், அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து பண உதவி பெறுகின்றன என்பதும், அவை, பி. சோ. தலைவர்களின் கூட்டுடன் இயங்குகின்றன என்பதும் நினைவில் கொள்ளவேண்டிய முக்கியமான விவகாரங்களாகும்.

"மேலும் இதோடு சேர்த்து, வரி கொடுப்போரின் பணம் கட்சி அரசியலுக்குச் செலவிடப்படுவது பற்றியும் பெரு முதலாளிகள் அரசியல் கட்சிகளுக்குப் பணம் தருவது பற்றியும் விவாதித்தாக வேண்டும்."

அபேட்சகர்கள் கவனத்திற்கு:

தேர்தல் செலவு பற்றிய விபரங்கள்

முடிவு தெரிந்த 30 நாளுக்குள் ஒப்படைக்கப்பட வேண்டும்

சென்னை, பிப். 19—

பாராளு மன்றத்திற்கும் மாநில சட்டசபைகளுக்கும் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் தேர்தலையொட்டித் தாங்கள் செலவு செய்த விவரங்கள் அடங்கின கணக்குப் பட்டியலில் சரியான நகல்களை தேர்தல் அதிகாரியிடம் தரவேண்டுமெனவும், அவ்வாறு செய்யத் தவறுவோர், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தபோதிலும் 3 ஆண்டுகளுக்குச் சட்ட மன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போட்டியிட்ட அபேட்சகர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் கண்டிப்பாக இதனைச் செய்தாக வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

தேர்தல் நடைபெறுவது பற்றிய விவரம் அறிவிக்கப்பட்ட நாள் தொட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரையுள்ள எல்லாவிதச் செலவுகளும் அந்தக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவேண்டுமாம்; இதில் பணம் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கான இரசீதுகள், கொடுக்கப்பட வேண்டியவைகளுக்கான பட்டியல்கள்போன்றவை அடங்கியிருக்கும் என்றும், இதனை, தேர்தல் முடிவு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் ஒப்படைத்தாக வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பெற்றிருக்கிறது.

சென்னை மாநிலத்தில், சட்டசபைத் தொகுதிக்குப் போட்டியிடுவோர் ஒன்பது ஆயிரம் ரூபாய் வரையும், மக்கள் சபைக்குப் போட்டியிடுவோர் 14 ஆயிரம் ரூபாய்வரையும் செலவிடலாம் என்று வரையறை விதிக்கப்பட்டிருப்பது அறிந்ததேயாகும்.

சேலம் மாவட்ட இரும்புச் செல்வம்

வெட்டியெடுப்பதற்கு உத்தேசித்திருக்கிறார்களாம்!

சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்புக் கனியை வெட்டி எடுப்பதற்கு இப்போது ஒரு தனி நபருக்கு அனுமதியளிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்; ஆனால், இது பரீட்சார்த்தத் திட்டந்தானாம்.

25 டன் இரும்புக் கனியை வெட்டியெடுப்பதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் அங்கு அமைக்கப்படுமாம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியும், மின்சாரமும் போதிய அளவு கிடைக்கும் வரையில், இங்கு இரும்புக் கனியை பெரும் அளவில் வெட்டி எடுக்கமுடியாதாம்.

உதவாக்கரை சர்க்காரை உதறித்தள்ளுவதற்கு தேர்தல்தான் சரியான வாய்ப்பு!

இலட்சுமணபுரி, பிப். 18—

"மக்களுக்கு எந்த வகையிலும் உபயோகமில்லாத ஒரு சர்க்காரை, அதிகாரபீடத்திலிருந்து உதறித்தள்ள வேண்டுமானால் அதற்குத் தேர்தல்தான் சரியான சந்தர்ப்பம். அதிகாரத்திலிருக்கும் ஒரு நல்லாட்சியை நழுவவிடுவது எந்த அளவுக்குத் தீமை பயக்குமோ, அதற்குக் கொஞ்சமும் குறையாத வகையில் சீர்கெட்ட ஒரு சர்க்காரை நீடித்து ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திவைப்பதாலும் தீங்குகள் ஏற்படும்."

இவ்வாறு, பி. சோ. கட்சித் தலைவர் ஆச்சாரியா கிருபளானி அவர்கள், இலட்சுமணபுரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை

மேலும் அவர், தேசியக் கட்சியாக இருந்த காங்கிரஸ் இன்று சாதாரண அரசியல் கட்சியாக மாறிவிட்டது என்றும், காஷ்மீர் நெருக்கடியைச் சுட்டிக்காட்டி இன்று காங்கிரஸ் மக்களிடம் ஓட்டுக் கேட்பதைக் கண்டித்தும் பேசினார்.

இவருக்கு மனச்சாட்சியே கிடையாதா?

இவரது நாக்கில் நரம்பே இல்லையா?

அன்றும்

"தென்னாடு தொழில் துறையில் மிகப் பின்தங்கிக் கிடக்கிறது என்பது வெறும் பிரச்சாரத்திற்காகச் சொல்லப்படும் கோஷம்—சுலோகம் அல்ல; மாருக மந்திய நிதி அமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிற உண்மையாகும்."

—நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் 1—7—56 அன்று தூத்துக்குடி உருக்கு . வர்த்தகர் மாநாட்டில்.

இன்றும்

"தி. மு. கழகத்தினர் கூறுகிறபடி சென்னை மாநிலம் தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கவும் இல்லை — புறக்கணிக்கப்படவும் இல்லை; ஏராளமான தொழில்கள் இங்கு இருக்கின்றன."

—நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் 17-2-57 அன்று சென்னி மலை காங்கிரஸ் தேர்தல் கூட்டத்தில்.

குசராத்தியர் ஆர்ப்பாட்டம்

தேர்தல் நேரத்தில் விரிவாகிறது

ஆமதாபாத், பிப். 19—

மொழி வழி மாநிலக் கோரிக்கையையொட்டி, மகா குசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகளின் பட்டியல் நாளுக்கு நாள் நீண்டுகொண்டே போகிறது!

ஆமதாபாத் நகரையடுத்த நாதியாத் எனும் இடத்தில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பின காங்கிரஸ் கட்சித் தலைவர் யு. என். தேபர் அவர்கள், மகா குசராத் ஆர்ப்பாட்டக்காரர்களால் வளைத்துக் கொள்ளப்பட்டாராம்!

அவர் ஏறிச் சென்ற கார், ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்வீச்சுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்ததாம்.

காட்கில் பேசிய கூட்டத்திலும் கல்லெறி

இரத்தினகிரியில் நடைபெற்ற ஒரு காங்கிரஸ் தேர்தல் பொதுக் கூட்டத்திலும் மகாகுசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்லெறிந்தும் சிலரைத் தாக்கியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர்.

அந்தக் கூட்டத்தில் திரு. என். வி. காட்கில் பேசிக்கொண்டிருக்கையில், மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள், மேடைமீது கற்களையும் பழைய செருப்புகளையும் வீசி எறிந்திருக்கின்றனர் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று அறிவித்திருக்கிறது.

குழப்பத்தின் காரணமாக ஒரு மணி நேரத்திற்குள் கூட்டத்தை முடித்துக்கொண்டு என். வி. காட்கில், பப்ளிக் பிராசிகியூட்டர் வி. ஜி. பண்டிட் ஆகியோர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—2—57 புதன்

தேர்தல் கமிஷன் எச்சரிக்கை!

ஆள் மாறாட்டம் செய்து திருட்டு ஓட்டு போடுதல், ஓட்டர்களுக்கு இலஞ்சம் கொடுத்து ஓட்டுப் பெறுதல், ஓட்டர்களையோ, மற்றவர்களையோ அச்சுறுத்துதல், வாக்குப் பதிவு நிலையத்திற்கு நூறு கெச தூரத்திற்குள் ஓட்டுச் சேகரித்தல், வாக்குச் சாவடிகளுக்கு வண்டிகள் மூலம் ஓட்டர்களை அழைத்து வருதல் முதலியனவெல்லாம், பொதுத் தேர்தல் விதிமுறைகளின்படி தண்டனைக்குரிய குற்றங்கள் என்று தேர்தல் கமிஷன் எச்சரித்திருப்பதோடு, தேர்தல் விதி முறைகளை எல்லா அபேட்சகர்களும், எல்லா கட்சியினரும் மதித்து நடக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

தங்களிடமுள்ள பணபலத்தால், தேர்தல் கமிஷன் குறிப்பிட்டுள்ள குற்றங்களை சுலபமாகப் புரிந்து, வெற்றி பெற்றுவிடலாம் என்று கருதுகிறவர்கள், இந்த எச்சரிக்கையையும், வேண்டுகோளையும் நன்றாக கவனிக்க வேண்டுகிறோம்.

தேர்தல் கமிஷன், இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பது, உலகத்தின் கண்களில், மண் தூவுவதற்காகத்தான் என்று பொதுவாக விழிப்புற்ற மக்கள் கருதிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டுமானால், தான் தண்டனைக்குரியன என்று சுட்டிக்காட்டியுள்ள குற்றங்களை எந்த ஒரு கட்சி அபேட்சகரேனும் அல்லது அவரது ஆதரவாளரேனும், புரிந்ததாக மற்றவர்களால் காணப்பட்டு, அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுப்பதில் பாரபட்சம் காட்டக்கூடாது. இதற்கு நடைமுறையில், உத்தரவாதம் தரப்படல்வேண்டும்.

தேர்தல் கமிஷன் இதயசுத்தியாகவே இந்த எச்சரிக்கையையும், வேண்டுகோளையும் விடுத்திருக்கிறது என்பதை, தேர்தல் நடைமுறைகள் இனித்தான் மெய்ப்பிக்க வேண்டும்.

தேர்தல் வேலைகளில் ஈடுபடும் அதிகாரிகள், போலீசார் எல்லாம் பாரபட்சமற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று கோரப்பட்டிருக்கின்றனர். என்றாலும், இவர்களில் சிலருக்கு, 'ஆளும் கட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதா' என்ற இயற்கையான பலவீனம் இருக்கக்கூடும். இந்த பலவீனம் பொதுத்தேர்தல்களின் நோக்கத்திற்கே உலைவைத்து விடக்கூடியாதலால், இவர்கள் தாங்கள் பாரபட்சமின்றி நடந்துகொள்வதற்காக, தகுந்த பயிற்சியும் பாதுகாப்பும் தரப்பட்டவர்களாயிருக்க வேண்டும். ஜனநாயக அமைப்பில், இன்று ஆளும் கட்சியாக இருப்பவர்கள் நாளை, எதிர்க்கட்சியினராக மாறிவிடக்கூடும். எனவே, குறுகிய கட்சி நோக்கினை விடுத்து, பரந்த ஜனநாயக நோக்குடையவர்களாக, தேர்தல் வேலைகளில் ஈடுபடும், சர்க்கார் அதிகாரிகள் இருத்தல் அவசியம். அந்த அதிகாரிகளுக்கு, தேர்தல்களின் புனிதத் தன்மையையும், பாரபட்சமற்று நடந்துகொள்ள வேண்டியதின் அவசியத்தையும் உணர்த்த தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

'சுற்றறிக்கை' அனுப்பிவிட்டோம் என்றால் போதாது. ஒவ்வொரு அதிகாரியும், தேர்தல் விதிமுறைகளை நன்கு அறிந்திருக்கிறாரா என்பதை முன்கூட்டியே சோதித்து அறிந்துகொள்ளவேண்டும் என்றும் விதி முறைகளை மீறி, நடந்துகொள்பவர்கள், கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூற விரும்புகிறோம்.

எத்தகைய தில்லுமுல்லுகளைச் செய்தேனும், தேர்தலில் வெற்றி பெற்றுவிடவேண்டும் என்று திட்டமிட்டிருப்போருக்கு, நாம் தேர்தல் கமிஷனின் எச்சரிக்கையைச் சுட்டிககாட்டுவதோடல்லாமல் கழக அபேட்சகர்கள் போட்டியிடுகிற தொகுதிகளில் தேர்தல் கமிஷன் கூறியுள்ள தண்டனைக்குரிய குற்றங்களைப் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதற்கென்றே பிரத்தியேகமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது கழகம் என்பதையும் கூறி வைக்கிறோம்.

திருட்டு ஓட்டுச் சேகரிக்கலாம்; பணம் கொடுத்து ஓட்டு வாங்கலாம் என்று கருதிக் கொண்டிருப்பவர்கள் இது போன்ற இழிசெயல்களில் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் புரிந்த குற்றங்களுக்கு அதிகாரிகள் தண்டனை வழங்குகிறார்களோ, இல்லையோ; அண்ணா அவர்கள், ஒருமுறை குறிப்பிட்டதுபோல, தில்லுமுல்லுகள் மூலம், ஓட்டுச் சேகரித்தவர்கள், உலகத்தின் கண்முன், வெளிச்சத்தில் நிறுத்திவைக்கப்பட்டு, அவர்கள் ஓட்டுப் பெற்ற 'இலட்சணம்' அம்பலப்படுத்தப்படும் என்றும் எச்சரிக்க விரும்புகிறோம்.

அக்கரை பிறந்து விட்டது போலும்!

சென்னை மாநில மாணவர்கள் மீது இந்திய சர்க்கார் திடீர் கருணை!

சென்னை, பிப். 19—

மாணவர்கள் தங்குவதற்கான விடுதிகள் கட்ட, சென்னை மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு விரைவில் இந்திய சர்க்கார் ரூ. 2 இலட்சம் அல்லது அதற்குக் குறைவான தொகையைக் கடனாகக் கொடுக்கும் என்றும், இந்தக் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படாது என்றும் தெரிகிறது.

இந்தக் கடன் தொகை 30 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாம்.

பல்கலைக் கழக மானியக் குழுவின்கீழ் வராத—ஆனால் சென்னை பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவை, இந்தக் கடன் தொகை பெறத் தகுதி பெற்ற நிறுவனங்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று அலட்சியம்-இன்று அக்கரை!

நெசவாளர் வடித்து வற்றிய கண்ணீரைத் துடைக்க ஆட்சியினர் முனையும் விசித்திரம்

சென்னை, பிப். 19—

கூட்டுறவு முறை அடிப்படையில் மேலும் இரண்டு கைத்தறித் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு சென்னை அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறதாம். இத்தொழிற்சாலைகளில் ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டையிலும், மற்றொன்று திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரிலும் நிறுவப்படுமாம்.

வேலையிழந்த கைத்தறி நெசவாளர்கள், சொந்தமாகத் தறிகள் இல்லாதவர்கள் இந்தத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாகச் சேரலாம் என்றும் தறிகள் வாங்கவும், அதற்கான சாதனங்கள் வாங்குவதற்கும் ஒரு தறிக்கு ரூ. 400 வீதம் நெசவாளர்களுக்கு வட்டியில்லா தகடன் அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அருப்புக்கோட்டைத் தொழிற்சாலைக்கு ரூ. 78 ஆயிரமும், கரூர் தொழிற்சாலைக்கு ரூ. 68 ஆயிரமும் அரசாங்கம் அளித்துள்ளதாம்.

மேலும், சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்காகக் கை வண்டிகள் விநியோகிப்பதற்கும் அரசாங்கம் ரூ. 1,00,000 அளித்துள்ளதாம்.

இது தவிர, தங்கள் வீடுகளைச் செப்பனிட்டுக் கொள்வதற்குக் கடனாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேலப்பாளையம், நெசவாளர்களுக்கு மத்திய சர்க்கார் ரூ. 40,000 வழங்கியுள்ளதாம்.

'உஸ்மானியா பல்கலைக் கழகத்தை கைநழுவவிடமாட்டோம்'

டில்லியின் கோரிக்கையை ஏற்க முடியாதென ஆந்திர அமைச்சர் திட்டவட்டமான அறிவிப்பு

தென்னாட்டில் இந்தி மொழியை எவ்விதத்திலும் ஒரு நிலையான போதனா மொழியாக்கிவிட வேண்டுமென்ற முனைப்பில், தென்னாட்டில் இந்தி மொழி கற்றுத் தரும் பல்கலைக் கழகமாக மாற்ற ஆந்திர மாநிலத்திலுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தை மத்திய சர்க்கார் தனது பொறுப்பில் விட்டுவிடுமாறு ஆந்திர அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

மத்திய சர்க்காரின் இந்தக் கோரிக்கையை ஆந்திர சர்க்கார் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று உறுதியோடு—திட்டவட்டமாக இப்போது பதில் தந்துவிட்டிருக்கிறார், ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவியார்.

இது குறித்துப் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் அவர் குறிப்பிடுகையில், 'உஸ்மானியா பல்கலைக் கழகத்தைத் தான் எடுத்துக்கொள்ள விரும்புகின்ற மத்திய சர்க்காரின் எண்ணத்தை நான் மிக வன்மையுடன் கண்டிக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முக்கியக் காரணமாக அவர் சில வசதிக் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதாவது, ஆந்திர மாநிலம் மிகப் பெரிய மாநிலமாக விளங்குவதால், அம்மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 3 பல்கலைக் கழகங்களும் கல்வியளிக்க அவசியம் தேவைப்படுவதால், அவற்றுள் ஒன்றை மாநில சர்க்கார் இழக்கமுடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வேண்டுமானால், இந்திமொழி பரவச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் வேறு ஏதாவது ஒரு பல்கலைக் கழகம்கட்ட இந்தியப் பேரரசு முடிவு செய்தால், அக்கட்டிடத்திற்கான இடவசதிகளை வேண்டுமானால் மாநில சர்க்கார் செய்து தரும் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

ஓட்டுகள் உடனே எண்ணப்படுமாம்!

சென்னை, பிப். 18—

பொதுத் தேர்தலில், கூடுமானவரையில், வாக்குப் பதிவு முடிந்த உடனேயே 'ஓட்டு'களை எண்ணிவிடும்படி எல்லா மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்.

அமெரிக்காவின் பிரும்மாண்ட விமானம்!

வாஷிங்டன், பிப். 19—

ஏராளமான சரக்குகளையும், ஆட்களையும் ஏற்றிச் செல்லக் கூடிய ஒரு பிரும்மாண்டமான விமானம் அமெரிக்காவில் கட்டப்பட்டு வருகிறதாம். இவ்விமானத்திற்கு 4 ஜெட் எஞ்சின்கள் இணைக்கப்பட்டிருக்குமென்றும், மணிக்கு 500 மைல் வேகத்தில் செல்லுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சமாதானத்திற்கு ஆபத்தாம்!

சென்னை, பிப். 19—

உலகத்தின் தற்போதைய மக்கள் தொகை 246 கோடி; இது ஆண்டிற்கு 3 கோடி 62 இலட்சம் வீதம் அதிகரித்து வருகிறதாம்!

கி. பி. 2001-வது ஆண்டில் உலகத்தின் மக்கள் தொகை 900 கோடியாகலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

"இவ்வாறு மக்கள் தொகை பெருகுவது உலக சமாதானத்திற்கு ஒரு பயமுறுத்தலாகும்" என்று, மக்கள் தொகை ஆராய்ச்சி டைரக்டர் டாக்டர் எஸ். சந்திரசேகர், தியாகராயர் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரணியாற்று அணைக்கட்டுத் திட்டம்

நிறுத்திவைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன?

சென்னை, பிப். 18—

செங்கற்பட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆரணியாற்று அணைக்கட்டுத் திட்ட வேலைகள் தற்காலிகமாக நிறுத்த வைக்கப்பட்டிருக்கின்றன. நீர்த்தேக்கத்துக்குத் தேவையான நிலங்களை ஆந்திர அரசாங்கம் ஆர்ஜிதம் செய்துதரவேண்டியிருப்பதாலேயே வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம்.

நில ஆர்ஜிதம் சம்பந்தமாக சென்னை, ஆந்திர அரசாங்கங்களுக்கிடையே அண்மையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது, நீர்த்தேக்கத்துக்கான நிலங்களை விரைவில் ஆர்ஜிதம் செய்து தர ஆந்திர அரசாங்கப் பிரதிநிதிகள் சம்மதம் அளித்திருக்கிறார்கள் என்றும் நில ஆர்ஜிதத்தை துரிதப்படுத்துமாறு ஆந்திர அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் அண்மையில் கேட்டுக்கொண்டிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

கழிவு நீர்ப் பண்ணைத் திட்டம் ஏற்படும்?

சென்னை, பிப். 16—

சுமார் 70 இலட்சம் காலன் சாக்கடைக் கழிவு நீரைப் பயன்படுத்தி கால்நடைகளுக்குத் தேவையான சீவனத்திற்குப் புல் வளர்க்கவும், 600 ஏக்கர் நிலமுள்ள பண்ணை ஒன்று ஏற்படுத்தி வாழை, சோளம், காய்கறி முதலியன பயிரிடவும் ரூ. 18 இலட்சம் செலவாகும் திட்டமொன்றை சென்னை நகரசபை ஆராய்ந்து வருகிறதாம்.

தாராளமே தாராளம்!

மீனவர்களுக்கு நீண்டகாலக் கடன் உதவியாம்!

சென்னை, பிப். 19—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மீன் பிடிப்போருக்கு நீண்டகாலக் கடன் உதவித் திட்டமொன்றை சென்னை அரசாங்கம் தயாரித்து, அதன்படி அவர்களுக்கு ரூ. 20 இலட்சம் கொடுக்கப்பட இருக்கிறதாம்.

தங்களுக்கு இருக்கும் கடன்களைத் தீர்ப்பதற்கும், தற்கால மீன் பிடிக்கும் சாதனங்களை வாங்குவதற்கும் இப்பணம் கடனாகக் கொடுக்கப்படுமாம்.

நடப்பு ஆண்டில் ஆயிரம் மீனவர்களுக்கு ரூ. 2,10,000 வரை கொடுப்பதாக இருக்கிறது. இதில் 600 பேர்களுக்கு ஏற்கனவே கடன் தொகை அனுமதியளிக்கப்பட்டுவிட்டன. இக்கடனை பத்து ஆண்டுக்காலத்தில் சிறிதுசிறிதாகத் திருப்பித்தர வகை செய்யப்பட்டிருக்கிறது.

மீன் பிடிப்பதற்குப் புதிய ரகப் படகுகளாம்!

மீன் பிடிப்பதற்கான இயந்திர வசதிகளுடன் கூடிய புதிய ரகப் படகு ஒன்றைச் சென்னை மீன் இலாகாவினர் கண்டுபிடித்துள்ளனராம். சென்னை, தூத்துக்குடி, கடலூர் முதலிய இடங்களில் இத்தகைய படகுகள் உபயோகிக்கப்படுகின்றனவாம்.

இனி என்ன குறைவு?

குறைந்த வருமானமுள்ளவர்கள் மீது டில்லிசர்க்கார் கருணை

வீடுகள் கட்டித்தருவதற்கு ரூ. 80 இலட்சம் அனுமதியாம்

சென்னை; பிப். 18—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் போது குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கும் திட்டத்திற்காக சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு மத்திய சர்க்கார் ரூ. 80 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்களாம்.

இந்த ரூ. 80 இலட்சத்தில் ரூ. 50 இலட்சம், வீடுகள் நிர்மாணிப்புக்கும், ரூ. 24 இலட்சம் வீடு நிர்மாணத்திற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கும் பயன்படுத்தப்படுமாம்.

சென்ற ஆண்டில் நகர டிரஸ்டுக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கியிருந்த ரூ. 30 இலட்சத்தில் 375 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை!

"காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்திலிருக்கும்வரையில், திராவிடஸ்தான் என்ற பிரிவினைக் கோரிக்கையை அது அனுமதிக்காது"

என்று முதன் மந்திரி காமராசர் சாஞ்சி தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினாராம்!

தென்னகத்தின் நிலவளம்!

கேரளத்திலும் இரும்புக் கனிப் பொருட்கள் காணப்படுகின்றன!

கோழிக்கோடு, பிப். 18—

கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோழிக்கோடுக்கு அருகில் ஓடும் பெய்ப்பூர் ஆற்றின் கரைகளில் ஏராளமான அளவில் இரும்புக் கனிப் பொருட்கள் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

இந்தப் பகுதிகளில் ஏற்கனவே இந்திய சர்க்காரின் நில ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனைகள் நடத்தியிருக்கின்றனர் என்றும், அவர்களுடைய மதிப்பீட்டின்படி இங்கு சுமார் 10 இலட்சம் டன் இரும்புக் கனிப்பொருட்கள் கிடைக்கலாம் என்றும் தெரிய வருகிறது.

ஏற்கனவே ஆந்திர மாநிலப் பகுதிகளிலும் இதுபோன்ற இரும்புக் கனிப்பொருட்களும், உயர்ந்தரக சுண்ணாம்புக் கல் படிவங்களும் ஏராளமான அளவில் கிடைப்பதாக இதே ஆராய்ச்சியாளர் அறிவித்திருந்தது இங்கு கருதத் தக்கது.

ஓட்டுச் சாவடியில் கையெழுத்துப் பதிவு

தேர்தல் குழு தகவல்

சென்னை, பிப். 19—

வருகிற பொதுத் தேர்தலின் போது சில குறிப்பிட்ட தொகுதிகளில் வாக்காளர்கள், வாக்குப் பதிவு செய்வதற்குமுன் அவர்களுடைய கையெழுத்து அல்லது அடையாளம் (கைரேகை) தரவேண்டுமென்று தேர்தல் குழு ஒரு விதி வகுத்திருந்தது. இதனை, 'அங்கீகரிக்கப்பட்ட' கட்சிகள் எல்லாம், தேர்தல் குழுவினால் கூட்டப்பட்ட சர்வ கட்சி மாநாடு ஒன்றில் அங்கீகரித்திருக்கின்றன என்றும், எனவே அம்முறையை ரத்து செய்வதற்கில்லை என்றும் தேர்தல் குழு இறுதி முடிவு அறிவித்துவிட்டிருக்கிறது.

இம்முறையைக் கைவிடுமாறு பல அரசியல் கட்சிகள் தேர்தல் குழுவைக் கேட்டுக்கொண்டன.

இந்த முறையை மேற்கொள்வதால் வாக்குப் பதிவு காலதாமதமாகிவிடாதென்றும், வாக்குச் சீட்டு அளிக்கப்படுமுன்பே கையெழுத்து வாங்கப்பட்டுவிடும் என்றும் அக்குழு அறிவித்திருக்கிறதாம்.

புதிய கம்யூனிஸ்டு சீனாவில் கோடீசுவரர்கள்!

புதிய கம்யூனிஸ்டு சீனாவில் 69 கோடீசுவரர்கள் இருப்பதாக ஹாங்காங்கிலிருந்து வெளியாகும் கம்யூனிஸ்டு ஆதரவு இதழ் ஒன்று எழுதியிருக்கிறதாம்.

1,493 பணக்காரர்கள், இலட்சக் கணக்கில் தொழில்களில் முதலீடு செய்துள்ளனராம்; அவற்றிற்கு அரசாங்கம் 5 சதவிகிதம் வட்டி தருகிறதாம்.

'கம்யூனிஸ்டு கட்சிமீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை'

புடாபெஸ்ட், பிப். 18—

"கம்யூனிஸ்டுக் கட்சிமீதும், சர்க்கார்மீதும் மக்களுக்கு ஒன்றும் முழு நம்பிக்கை பிறக்கவில்லை"

என்று, கம்யூனிஸ்டு பத்திரிகையான 'நெப்சபத்சாக்' என்ற இதழ் ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

இந்தியாவின் நான்கு செய்தி விளக்கத் திரைப் படங்களைப் பொதுமக்களுக்குக் காட்டக்கூடாதென மேற்கு பாகிஸ்தான் திரைப் படத் தணிக்கைக் கழகம் தடைவிதித்திருக்கிறதாகச் செய்தி தரப்பட்டுள்ளது.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழே'

என்று சங்கு முழங்குகிறோம் **நாம்**

★

ஆனால்.....

எங்கள் ஏகாதிபத்தியம் நிலைபெற

இந்தி! இந்தி! இந்தி!

இந்திதான் வேண்டும் என்கின்றனர் **வடவர்!**

★

அன்றொரு நாள் இந்தியைத் திணித்துத் தமிழரிடம் தோல்வி கண்ட **ஆச்சாரியார்**, மற்றும் நீதிக் கட்சித் தலைவர் **பி. டி. இராசன்**, அண்ணாமலைப் பல்கலைக்கழக வேந்தர் **ராஜா சர். முத்தையா செட்டியார்**, அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் **எஸ். ஜி. மணவாள இராமானுஜம்**, முன்னாள் திரு-கொச்சி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி **டி. எம். கிருஷ்ணசாமி ஐயர்**, தமிழரசுக் கழகத் தலைவர் **ம. பொ. சிவஞானம்**, தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் தலைவர் **ஏ. இரத்தினம்**, இந்திய ஊழியர் சங்க **எஸ். ஆர். வெங்கட்ராமன், கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் ஆர். பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார்**, முன்னாள் 'கல்கி' ஆசிரியர் **எம். பி. சோமசுந்தரம், டாக்டர் ஏ. சீனிவாசன்** முதலியோர்

'இந்தி வேண்டாம்;

இந்தியாவின் பொது மொழியாக

ஆங்கிலமே இருக்க வேண்டும்'

என்று கூறியுள்ளனர்

★

இந்தித் திணிப்பு கூடாது

என்று இன்னும் பலர்

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கண்டித்துள்ளனர்

★

என்றாலும், எங்கும் எதிலும்

இந்தி! இந்தி! இந்தி!

★

தபால் தந்தி இலாகா, இரயில்வே இலாகா, பாதுகாப்பு இலாகா என்று டில்லியின் எல்லா நிர்வாகத் துறைகளிலும்

இந்தி! இந்தி! இந்தி!

இந்திதான் இடம்பெற்றுள்ளது இன்றே!

★

வடவரின் இந்த ஏகாதிபத்திய அநீதிக்கு அக்கிரமத்திற்குத் துணை நிற்கின்றனர் இங்குள்ள

'ஏக இந்தியா'க்கள்!

★

தமிழைத் தாழ்த்தி, படிப்படியாக வீழ்ந்த வடவரின் இந்தித் திணிப்பு எனும் சதிக்கு உடந்தையாயிருக்கும்

'அகில இந்தியா'க்களுக்கா உங்கள் வாக்கு?

வாக்காளரே! கூறுங்கள்!

★

தாய்மொழியைக் காக்க! இந்தி ஆதிக்கத்தை வீழ்த்த!

தி. மு. க. அபேட்சகர்களுக்கே

வாக்களியுங்கள்

கே. ஆர். இராமசாமி சொற்பொழிவு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகம். இப்படி, நாட்டு மக்களின் வறுமையை போக்கப் பாடுபடுகிறதே ஒழிய 150 ரூபாய்க்காகத் தேர்தலில் நிற்கவில்லை.

"சில ஆண்டுகளுக்கு முன்பு சேலத்தில் நடந்த நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். பொங்கல் விழாவன்று எல்லோரும் ஆனந்தமாகப் பொங்கல் விழாக் கொண்டாடினார்கள். ஓர் நெசவாளியின் குடும்பம், பட்டினியால், பொங்கல் அன்றும் வீட்டில் சமைப்பதற்கு எதுவுமில்லாமல் வறுமையால் வாடிக் கிடந்தது. நெசவாளியின் மகன் 3-வயதிருக்கும் சிறுவன் தன் அப்பாவிடம் ஓடிவந்து 'அப்பா எல்லோரும் பொங்கல் கொண்டாடுகிறார்களே; நம் வீட்டிலும் ஏனப்பா கொண்டாடவில்லை?' என்று கேட்டான்.

"தந்தை, கண்ணீர் விட்டபடி 'நாம் அடுத்த வருடம் கொண்டாடலாம்' என்றார் அந்த ஏழை நெசவாளி. அந்தச் சிறுவன், 'அப்பா எல்லோரும் கரும்பு தின்கிறார்கள்; எனக்கும் ஆசையாயிருக்கிறது' என்றான். அந்த நெசவாளியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இதைத் தன் மனைவியிடம் கூறினார். அவர் மனைவியின் பெயர் கமலா என்று நினைக்கிறேன். அந்த அம்மாள் வீட்டுக்குள் ஓடி தன் கல்யாணப் புடவையை—தான் கட்டிக்கொண்டிருந்த புடவையை—தனக்கிருந்த அந்த ஒரே புடவையை தன் கணவரிடம் கொடுத்து 'இதை விற்றுப் பொங்கலுக்கு சாமான் வாங்கி வாருங்கள்' என்றார். அந்த ஏழை நெசவாளி புடவையை எடுத்துக் கொண்டு போய் கடை வீதியிலே 3 ரூபாய்க்கு விற்று 2 ரூபாய்க்கு அரிசி, பானை எல்லாம் வாங்கிக் கொண்டு, தன் மகனுக்குக் கரும்பும் வாங்கிக்கொண்டு கையில் ஒரு ரூபாய் காசுடன் வீடு திரும்பினார். வழியில் தன் மகனிடம் கரும்பு தந்துவிட்டு, 'எங்கேடா அம்மா?' என்றதற்கு அவன் 'அம்மா வீட்டிலிருக்கிறாள்' என்று சொல்ல, வீட்டிற்குச் சென்றார். மூடியிருந்த கதவைத் திறந்து, உள்ளே பார்த்ததும், அவரது மனைவி துணியின்றி தூக்கிலே தொங்கிக் கொண்டிருந்தாள். அவள் தூக்கு மாட்டிக்கொண்டு உயிரை மாய்த்துக்கொண்ட காட்சியைத்தான் அந்த நெசவாளி கண்டார்.

"இந்தச் சம்பவங்கள்போல் அநேகம் இந்த சர்க்காரில் நடந்திருக்கின்றன. தங்கள் ஆட்சியிலே ஏழைகளின் கோரக் காட்சியை ஏற்படுத்தும் காங்கிரசுக்கா உங்கள் ஓட்டு? தமிழ் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடக் கோரி உண்ணாவிரதமிருந்த சங்கரலிங்கனாரைப் போய்ப் பார்த்து உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்யாத காமராசர் சர்க்காருக்கா உங்கள் ஓட்டு?

"பெரியார்கூடக் காங்கிரசாருடன் சேர்ந்து கொண்டு நம்மைத் தாக்கிப் பேசுகிறாரே என்று சிலர் வருத்தப்படுகிறார்கள். பெரியார் மேல்வாரியாக—தமாஷாகப் பேசுகிறாரே தவிர ஆழ்ந்த கருத்துடன் நம்மைத் தாக்கவில்லை — நமது குற்றம் குறைகளை எடுத்துக் கூறவில்லை. 'இந்த தி. மு. க. — பயல்கள்' என்று கேலியாகப் பேசுவாரே தவிர, பெரியார் நம்மீது வெறுப்புடன் பேசுவதில்லை. அவர் காங்கிரஸ் பக்கத்திலே நின்று பேசி வருவது எல்லாம் காங்கிரசைக் கலைப்பதற்காகவே. அவர்களைப் பூண்டுடன் ஒழிக்கவே என்று கருதுகிறேன்.

'எனவே இவைகளுக்கெல்லாம் மக்கள் கழகத் தோழர்கள் கவலைப்படாமலிருக்கக் கேட்டுக் கொள்கிறேன். கழக அபேட்சகர்களை ஆதரித்து வெற்றியடையச் செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன."

சர்க்கார் ஊழியர்கள்

தேர்தல் வேலையில் ஈடுபடக் கூடாதென உத்தரவு

சென்னை, பிப், 19—

எந்த ஒரு கட்சிக்குமோ, எந்த ஒரு நபருக்குமோ தேர்தல் வேலை எதுவும் செய்யக் கூடாது என எடுத்துரைத்தும், ஊழியர் நடைமுறை ஒழுங்கு விதிகளை மீறக்கூடாது என வற்புறுத்தியும் சென்னை சர்க்கார், தம் ஊழியருக்கு ஒரு கண்டிப்பான சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

முகவரி:

சேலம்-1 தொகுதியில் போட்டியிடும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களது முகவரி:—

சாம்பலிங்கமூர்த்தி தெரு,
செவ்வாய்ப்பேட்டை,
சேலம்.

போன் எண் : 585.

தேர்தல் ஊர்வலம்

21—2—57 மாலை 5 மணிக்கு, சென்னை—எழும்பூர் சட்டசபைத் தொகுதி தோழர் க. அன்பழகன் அவர்களை ஆதரித்து, சென்னை—புரசை, வேளாளர் வீதி, எண் 10 இல்லத்திலிருந்து தோழர் என். ஆர். சடகோபன் தலைமையில் தேர்தல் ஊர்வலம் புறப்படும். தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்களைச் சார்ந்த தோழர்களனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன்

சுற்றுப்பயண விவரம்

பிப். 21:
காலை 9 மணி: சித்தையன் கோட்டை; 11 மணி: பட்டிவீரன்பட்டி; பிற்பகல் 4 மணி: உடுமலைப்பேட்டை தொகுதி.

பிப். 22, 23, 24:
நாகர்கோயில்—நாடகங்கள்.

பிப். 25:
காலை 10 மணி: ஸ்ரீவில்லிபுத்தூர் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 4 மணி: திருக்கோட்டியூர் தொகுதி.

பிப். 26:
காலை 10 மணி: கம்பம் (சிறப்புக்கூட்டம்); பகல் 12 மணி: உத்தமபாளையம் தொகுதி; பிற்பகல் 4 மணி: தேனி தொகுதி.

பிப். 27:
இரவு 9 மணி: மதுரை—'சுமைதாங்கி' நாடகம்.

மார்ச் 1:
ஸ்ரீபெரும்புதூர் தொகுதி.

மார்ச் 2:
காலை 8 மணி: லால்பேட்டை; 9-30 மணி: சிதம்பரம் (சிறப்புக் கூட்டம்); 10-30 மணி: திருமுஷ்ணம்; பிற்பகல் 2 மணி: நெல்லிக்குப்பம்; 4 மணி: கடலூர்; 6 மணி: விருத்தாசலம்; 8 மணி: கள்ளக்குறிச்சி; 10 மணி: தர்மபுரி.

மார்ச் 3:
சேலம் தொகுதி.

மார்ச் 4:
காலை 10 மணி: அரூர்; 12 மணி: சிங்காரப்பேட்டை; பிற்பகல் 3 மணி: திருப்பத்தூர் (வ. ஆ.); 5 மணி: கந்திலி; 6-30 மணி: ஜோலார்பேட்டை; 8-30 மணி: வாணியம்பாடி.

மார்ச் 5, 6:
சென்னை நகரத் தொகுதிகள்.

மார்ச் 8:
குளித்தலைத் தொகுதி.

மார்ச் 9:
மதுரை மத்திய தொகுதி.

குறிப்பு: தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடன், தோழர் அ. பொன்னம்பலனார், நடிகர் என். எஸ். நாராயணன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பறக்கும் தட்டு!

மியூனிச் (மேற்கு ஜெர்மனி) பிப். 18—

மணிக்கு 1,250 மைல் வேகம் செல்லும் பறக்கும் தட்டுகளை, இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஜெர்மனி, இதர சில இரகசிய ஆயுதங்களுடன் தயாரித்ததாக, இங்கு வெளியிடப்பட்டுள்ள அதிகாரபூர்வமான புத்தகம் ஒன்று தெரிவித்திருக்கிறதாம்.

ரூ. 7 கோடி செலவில்!

கோவையில் நார்ப்பட்டு ஆலை அமைக்க டில்லி அனுமதியாம்!

அந்நிய சர்க்கார் நிதி உதவி!

கோவை பகுதியில் ரேயான், மற்றும் நார்ப்பட்டு நூல் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக மத்திய சர்க்கார் அனுமதியளித்துள்ளதாம்,

இத்தொழில்களுக்கு, இத்தாலியக் கம்பெனி ஒன்றும் இத்தாலிய சர்க்காரும் பணம் முதலீடு செய்வது, கடன் கொடுப்பது ஆகியவைகள் மூலம் ஒத்துழைப்பு தருவார்களாம்.

இது தவிர, தென்னிந்தியத் துணி ஆலைக்காரர்கள் தங்கள் சேமிப்புகளிலிருந்து ரூ. 1 கோடி வரையில் இதில் முதலீடு செய்வார்களாம்.

இந்தத் தொழிற்சாலையில் தினமும் 10 டன் ரேயான், 10 டன் நார்பட்டு நூல்கள் தயாரிக்க முடியும் என்றும், இது ரூ. 7 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்படுமென்றும் அறியக்கிடக்கிறது.

'தேர்தலில் தி. மு. கழகத்திற்கு வெற்றி தேடித் தாருங்கள்'

பொதுமக்களுக்கு நடிப்பு, இசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி வேண்டுகோள்

சென்னை 27-வது வட்டம் அறிவியக்க மன்றச் சார்பில், பேசின்பிரிட்ஜ் தொகுதி அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து, கடந்த 15-ந் தேதியன்று நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"காங்கிரஸ் கடந்த ஒன்பதாண்டுகளாக நடத்திய ஆட்சியில் மக்களின் வாழ்க்கையில் என்ன மாற்றம் ஏற்படுத்திவிட்டது? மக்கள் இன்னும் பஞ்சத்தாலும், பட்டினியாலும் பசியாலும் வாடித்தானே கிடக்கிறார்கள்? வெள்ளைக்காரன் ஆட்சியில் நடந்த அக்கிரமத்தைவிட இந்த சர்க்காரின் ஆட்சியில் அக்கிரமங்கள் அதிகமாகத்தானே இருக்கிறது? வெள்ளைக்காரனாவது கூட்டத்தைக் கலைக்க குண்டாந்தடியை எடுப்பான்; காங்கிரஸ்காரர்கள் துப்பாக்கியையல்லவா எடுக்கிறார்கள்? இதுவரையிலும் இவர்கள் ஆட்சி மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

'இந்த நாட்டை இன்னும் ஐந்து ஆண்டுகள் காங்கிரஸ்காரரிடம் ஒப்படைத்து நாம் வேதனைப்படத்தான் வேண்டுமா?

"தேர்தலில் போட்டியிடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் செயலாளர்களின் கண்ணைத் துடைக்க கைத்தறித் துணிகளைத் தோளில் போட்டுக்கொண்டு தெருத் தெருவாக விற்றது. அதன் பிறகு தஞ்சைப் பகுதியிலே புயலும் வெள்ளமும் வந்தபோது இலட்சக்கணக்கானத் துணிகளைக் கொண்டுபோய் பாதிக்கப்பட்டோருக்குக் கொடுத்து உதவி இருக்கிறது

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர்: 30 நாடுகளிடம் டில்லி முறையீடு!

பாகிஸ்தானுக்கு இறுதி எச்சரிக்கை தரவேண்டுமென்கிறார் பக்ஷி

புதுடில்லி, பிப். 19—

"ஐ. நா. பாதுகாப்புச் சபையில் உள்ள நாடுகள் எத்தனைதான் பாரபட்சம் காட்டுபவையாயிருந்தபோதிலும், இந்தியா, காஷ்மீர் பிரச்சினையின் அடிப்படை அம்சங்களை மாற்றிக் கொள்வதற்கு இல்லை"

என்று, டில்லி தலைநகரில் உள்ள சுமார் 30 நாடுகளின் தூதுவர்களுக்குத் தெரிவித்துவிட்டதாம்.

பாகிஸ்தான் இந்த விவகாரத்தை—ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவின் ரத்து அதிகாரப் பிரயோகத்தால் தோல்வி கண்டால்—ஐ. நா. பொதுச் சபைக்கு எடுத்துவரக்கூடும் என்றும் அதற்காகவே இப்போது இந்த முடிவை டில்லி இதர நாடுகளுக்குத் தெளிவாக்குகிறது என்றும் தெரியவருகிறது.

★

'இறுதி எச்சரிக்கை'

டோராநின், பிப். 18—

"காஷ்மீரில், தான் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து பாகிஸ்தான் வெளியேறுவதற்கு ஒரு தேதியை நிர்ணயிப்போம்; அந்தத் தேதிக்குள் காஷ்மீரை விட்டு பாகிஸ்தான் வெளியேறுவிட்டால், நாம் அந்தப் பகுதியைத் திரும்பப் பெறுவோம்"

என்று, காஷ்மீர் முதன் மந்திரி பக்ஷி குலாம் இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

குஜராத்தியர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்புகையில் அவர்களை இடையில் வழிமறித்துச் சிலர் தாக்கினராம்.

இது மட்டுமின்றி, இரவு விருந்து சாப்பிடுவதற்காக அவர்கள் இருவரும் சென்ற எம். டி. ஜோஷி அவர்களது வீட்டின் மீதும் சிலர் கல்லெறிந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை பேசின்பிரிட்ஜ்:

21—2—57 மாலை 6-மணிக்கு சென்னை ஒற்றைவாடை தியேட்டருக்கு அருகிலுள்ள அம்மன்கோவில் தெருவில் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து சென்னை 27-வதுவட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் ஜே. எஸ். ஸ்ரீராமுலு தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

* * *

21—2—57 மாலை, சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை லாயர் சின்னத்தம்பி முதலி தெருவில் தோழர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து சென்னை 7-வதுவட்டத் தி. மு. க. சார்பில் தோழர் லா. கணேசன் தலைமையில் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், டி. சந்திரசேகரன், பெ. த. இன்மொழியன், சி. ஆர். பாலசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

சென்னை—பெரியமெட்டு:

21—2—57 மாலை 6-மணிக்கு சென்னை—பெரியமெட்டு பாரக்ஸ் நெடுஞ்சாலையில் (மெடிகல் ஸ்டோர் பின்புறம்) 26-வதுவட்ட தி. மு. கழகச் சார்பில் தோழர் க. அன்பழகன் அவர்களை ஆதரித்து தோழர் சு. நல்லதம்பி தலைமையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம், ஆர். ஜார்ஜ், அப்துல் காதர், ரநூல் ஆகியோர் பேசுவர்.

சென்னை 48வதுவட்டம்:

22—2—57 மாலை 6-மணிக்கு சென்னை கொத்தவால்சாவடி தெருவில் (தண்ணீர்தொட்டி அருகில்) 48-வதுவட்ட தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் க. முருகேசன் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன், தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவர்.

திருக்காரவாயில்:

21—2—57 மாலை 6-மணிக்கு திருக்காரவாயில் தெற்கு வீதியில், தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் நாஞ்சில் கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

காரியாங்குடி:

21—2—57 இரவு 8-மணிக்கு காரியாங்குடியில் நடைபெறும் தேர்தல் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், குழந்தை ஆகியோர் பேசுவர்.

தஞ்சைக்கு இந்த திட்டம்

தஞ்சை, பிப். 19—

தஞ்சை அரண்மனைக் கட்டடத்தில் காகிதக் கூழைக் கொண்டு விளையாட்டுச் சாமான்களைத் தயாரிக்கும் மாதிரி 'யூனிட்' ஒன்று விரைவில் ஆரம்பமாகும் எனவும், திரு. பி. டி. இராசன் அவர்கள் இதற்கு பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது.

மேலும் பாய் பின்னுவோர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் ஒன்று கண்ணன் தங்குடி (ஒரத்தநாடு தாலுகா)வில் ஆரம்பிக்கப்படும் என்றும் அம்மாபேட்டையிலும் இத்தகைய மற்றொரு சங்கம் ஆரம்பிக்க ரூ. 9,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

அறிவிப்பு

★

சென்னை பேசின்பிரிட்ஜ் தொகுதியில் தி.மு.க. அபேட்சகராகச் சென்னை சட்டசபைக்குப் போட்டியிடுகின்ற என்னைப்பற்றி, எனக்கு அறிவிக்காமலும் என் அனுமதியின்றியும் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் விளம்பரங்கள் முதலிய எவையும் என்னைக் கட்டுப்படுத்த மாட்டா என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்பன்,

என். வி. நடராசன்

அறிவிப்பு

★

தோழர் மு. கருணாநிதி அவர்களின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வெளித் தொகுதிகளில் ஒப்புக்கொண்டுள்ள கூட்டங்களில் 24-ந் தேதி வரையில்தான் கலந்துகொள்ள இயலுமென்றும், 25-ந் தேதிக்குமேல் ஒப்புதல் தந்துள்ள இடங்களுக்குச் செல்ல இயலாமைக்கு வருந்துவதாகவும் அறிவித்துக் கொள்கிறார்.

காஞ்சி கல்யாணசுந்தரம்

சுற்றுப் பயணம்

பிப். 22 : விக்கிரவாண்டி
23 : சிவகெங்கை
24 : திண்டுக்கல்
25 : தர்மபுரி
26 : ,,
27 : கோவை
28 : பட்டுக்கோட்டை
மார்ச் 1 : சோழவந்தான்
2 : நாமக்கல்

கி. மனோகரன்

சுற்றுப்பயணம்

பிப். 21: வேலூர், திருக்கோபுர வாசல்; பிப். 22: திருவாரூர், கொட்டாரக்குடி; பிப். 23: நன்னிலம் தொகுதி; பிப். 24, 25: மன்னார்குடி தொகுதி; பிப். 26, 27: மாயூரம் தொகுதி; மார்ச் 1: சீர்காழி; மார்ச் 2: பொறையாறு; மார்ச் 3: மாயூரம்; மார்ச் 4: நாகப்பட்டினம் தொகுதி; மார்ச் 5: திருத்துறைப்பூண்டி தொகுதி; மார்ச் 6: நன்னிலம் தொகுதி; மார்ச் 7: மன்னார்குடி தொகுதி; மார்ச் 8, 9: நாகப்பட்டினம் தொகுதி.

அறிவுடை நம்பி

சுற்றுப்பயணம்

பிப். 21 : கோவைத் தொகுதி; பிப். 22, 23 : தாராபுரம் தொகுதி; பிப். 24 : சிவகங்கை, பூங்குடி; பிப். 25 : பாகனேரி, மதகுப்பட்டி; பிப். 26 : மாலை சின்னசேலம், இரவு கள்ளக்குறிச்சி; பிப். 27: செஞ்சி; பிப். 28, மார்ச் 1 : மன்னார்குடி தொகுதி: மார்ச் 2: சென்னை.

எஸ். நெடுமாறன்

சுற்றுப்பயணம்

பிப். 21 : முசிறி தொகுதி; பிப். 22, 23, 24 : லால்குடி தொகுதி; பிப். 25—மார்ச் 2 : பெரம்பலூர் தொகுதி.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.